**செய்தி வெளியீடு எண்: 84** **நாள் : 25.01.2011.**

**<u>தமிழ்நாடு அரசு</u>**
**<u>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை</u>**
**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**
**<u>பொட்டலமிடப்பட்டு விற்பனை செய்யும் உணவுப் பொருட்கள் மற்றும் எடை அளவு கருவிகள் தொடர்பான நுகர்வோர் விழிப்புணர்வு கேள்வி நேரம் – தொலைக்காட்சி நேரலை நிகழ்ச்சி</u>**

தமிழ் நாடு அரசு, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மாநில அளவில் நுகர்வோர்க்கு விழிப்புணர்வு வழங்கும் திட்டத்தின் ஒரு செயல்பாடாக நுகர்வோர்கள் அன்றாட வாழ்வில் எதிர் கொள்ளக்கூடிய பிரச்சனைகள் தொடர்பாக பொதிகை தொலைக்காட்சியில் நேரலை நிகழ்ச்சி நடத்தி தொலைபேசி வாயிலாக நுகர்வோர் கோரும் சந்தேகங்களுக்கு விளக்கம் வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மாதம்தோறும் மேற்கொள்ளப்படும் இச்சீரிய நடவடிக்கையில் 27.01.2011 வியாழக்கிழமையன்று முற்பகல் 12-05 மணி முதல் பிற்பகல் 01-00 மணி வரை **<u>பொட்டலமிடப்பட்டு விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் எடை அளவு கருவிகள் தொடர்பான</u>** விளக்கங்கள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது,. அவ்வமயம் நுகர்வோர்கள் மேற்கண்ட பொருள் தொடர்பான தங்களது கேள்விகளை கீழ்க்காணும் தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம்.

| | |
|---|---|
| உள்ளூர் நுகர்வோர்கள் | 17077, 64628270, 9444901011, 9444901021 |
| வெளியூர் நேயர்கள் | 044 – 17073, 64628270, 9444901011, 9444901021<br>ISD 0091 44253 97010 |

மேற்கண்ட பொட்டலப்பொருட்கள் மற்றும் எடை அளவைகள் மற்றும் உணவு கலப்படம் தடுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடிய தொழிலாளர் துறை மற்றும் பொது சுகாதாரம் / நோய் தடுப்புத் துறையினை சார்ந்த உயர் அலுவலர்கள், நுகர்வோர் பாதுகாப்பு ஆர்வலர்கள் மற்றும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் உயர் அலுவலர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குடிமக்களின் கேள்விகளுக்கு கருத்துரைகள் வழங்குவார்கள். தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் சங்கம் வாயிலாக ஏற்பாடு செய்யப்படும் இந்நிகழ்வில் தொலைபேசி வாயிலாக கலந்து கொண்டு விளக்கங்கள் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது,

**ஆணையாளர்**
**உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர் வோர் பாதுகாப்புத் துறை**

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**